# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2019

**ஆண்டு: 5** **திகதி: 22/06/2019**

**நேரம்: 2 மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்கள்: திருமதி. செ சிவசுப்பிரமணியம்**
**திருமதி. பி பாஸ்கரதேவன்**

**மாணவர் பெயர்: ______________________________**

| வினாக்கள் | புள்ளிகள் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 10 | |
| வினா 6 | 20 | |
| வினா 7 | 20 | |
| மொத்தப் புள்ளிகள் | | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் பகுதியை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

வீரமாமுனிவர் என்பவர் தமிழ்மொழிக்கு அருந்தொண்டு ஆற்றிய ஐரோப்பிய அறிஞர்களுள் ஒருவர். அவர் இத்தாலி நாட்டில் பிறந்தார். அவருடைய இயற்பெயர் கான்ஸ்டன்ஷியுஸ் ஜோசப் பெஸ்கி என்பதாகும். அவர் ஒரு பாதிரியார்.

வீரமாமுனிவர் இளமைக் காலத்திலிருந்தே பல மொழிகளைக் கற்பதில் ஆர்வம் உடையவராக இருந்தார். 1710 ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு வந்து தமிழ் நாட்டில் சமயத் தொண்டு புரியத் தொடங்கினார். அவர் தஞ்சாவூர், அரியலூர், மதுரை முதலிய ஊர்களில் பணிபுரிந்தார்.

வீரமாமுனிவர் தம் சமயத்தைத் தமிழ் நாட்டில் பரப்ப வேண்டும் என்ற ஆவலில் தமிழ் பயின்றார். அதனால், அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஆழ்ந்து கற்றுத் தேறினார். தமிழில் தாமே நூல் எழுதும் ஆற்றலைப் பெற்றார். பல இந்திய மொழிகளைக் கற்றிருந்தாலும் வீரமாமுனிவர் தமிழ்மொழியின்மீது அதிகப் பற்றும் ஆர்வமும் கொண்டிருந்தார்.

வீரமாமுனிவர் தமிழ்மொழிக்கு ஆற்றியுள்ள தொண்டு பாராட்டுக்குரியது. அவர் தமிழில் தேம்பாவணி என்னும் பெருங்காப்பியத்தைப் பாடினார். அவர் பல இலக்கண இலக்கிய நூல்களோடு ‘பரமார்த்த குரு’ என்ற நகைச்சுவைக் கதை நூலையும் படைத்துள்ளார். முதன் முதலில் தமிழில் அகராதியை உருவாக்கியபர் வீரமாமுனிவரே. திருக்குறளில் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீன் மொழியில் இவர் மொழிபெயர்த்துள்ளார். இந்நூலின் மூலம் ஐரோப்பியர்களும் திருக்குறளின் பெருமையை அறிந்துகொள்ள முடிகிறது.

i. வீரமாமுனிவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

________________________________________

________________________________________

ii. அவருக்கு எதில் அதிக நாட்டம் ஏற்பட்டது?

________________________________________

________________________________________

iii. வீரமாமுனிவர் தமிழில் நூல் இயற்றும் திறனை எவ்வாறு பெற்றார்?

______________________________________________

______________________________________________

iv. தேம்பாவணி என்பது யாது?

______________________________________________

______________________________________________

v. ஐரோப்பியர் திருக்குறளின் சிறப்பை எவ்வாறு தெரிந்துகொள்கின்றனர்?

______________________________________________

______________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

2.1 பின்வரும் பட்டியல் ஒவ்வொன்றிலும் ஒரு சொல் வேறுபட்டுள்ளது. அதனை இனங்கண்டு அடிக்கோடிடுக.

i. மன்னன் / இளவரசன் / அரசி / தளபதி

ii. யானை / மயில் / குதிரை / ஒட்டகம்

iii. கரண்டி / புத்தகம் / கொப்பி / பேனா

iv. கட்டில் / மேசை / கதிரை / தலையணை

v. கடல் / புல்வெளி / ஆறு / நதி

2.1 பின்வரும் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை எழுதுக.

i. ஆண்டு : ______________________

ii. நாடகம் : ______________________

iii. ஓவியம் : ______________________

iv. மாணவன் : ______________________

v. தமிழன் : ______________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

3.1 பின்வரும் சொற்களை சேர்த்து எழுதுக

i. பால் + குடம் : ______________________________

ii. மரம் + வேலை : ______________________________

iii. கல் + சிலை : ______________________________

iv. நான்கு + நூறு : ______________________________

v. கருமை + பலகை : ______________________________

3.2 பின்வரும் வசனங்களின் அடைப்புக்குள் உள்ள சொற்களில் சரியான சொல்லைத் தெரிந்து அடிக்கோடிடுக.

i. பலத்த ( மலையினால் / மழையினால் ) வெள்ளம் ஏற்பட்டது.

ii. கடல்நீரில் பலவகையான உப்புக்கள் ( கரைந்துள்ளன / கறைந்துள்ளன ).

iii. புது வருடப்பிறப்பினை மக்கள் ( வாண / வான ) வேடிக்கைகளுடன் கொண்டாடினர்.

iv. காட்டுத் தீயினால் பல மரங்கள் ( அளிந்தன / அழிந்தன ).

v. கலைவிழா நிகழ்ச்சிகளை பெற்றோர் கண்டு ( கழித்தனர் / களித்தனர் ).

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

4.1 பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த சொற்களை எழுதுக.

i. மன்னன் : ______________________

ii. தாய் : ______________________

iii. தந்தை : ______________________

iv. கோவில் : ______________________

v. உணவு : ______________________

4.2 பின்வரும் வாக்கியங்களில் அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொல்லை பொருத்தமான காலத்திற்கு மாற்றி எழுதுக.

i. நான் நாளை ஓவியம் ______________________ (வரை).

ii. தங்கை நேற்று நடனம் ______________________ (ஆடு).

iii. நாங்கள் இன்று சுற்றுலாவில் ______________________ (செல்).

iv. அண்ணா நாளை வேலைக்கு ______________________ (போ).

v. அக்கா நேற்று பாட்டு ______________________ (பாடு).

BLANK PAGE

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

5.1 பின்வரும் தொழில் காரணமாக அமையும் பெயர்களைத் தருக

i. மருத்துவம் பார்ப்பவர்

______________________________

ii. கப்பல் ஓட்டுபவர்

______________________________

iii. மரவேலை செய்பவர்

______________________________

iv. வழக்குகளை விசாரிப்பவர்

______________________________

v. ஆடுகளை மேய்ப்பவன்

______________________________

5.2 பெயர்ச்சொற்களுக்கு பொருத்தமான வினைச் சொற்களுடன் இணைக்குக.

| | |
|---|---|
| i. மன்னர்கள் | விளையாடினர் |
| ii. சிறுவர்கள் | பொழிந்தது |
| iii. பூக்கள் | ஆட்சி செய்தனர் |
| iv. மழை | வீசியது |
| v. காற்று | மலர்ந்தன |

| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**கடிதம் எழுதுதல்.**

உமது நண்பருக்கு, உமது பிறந்த நாள் விழாவிற்கு வரும்படி அழைப்பு விடுத்து கடிதம் எழுதுக.

இவ்விழாவிற்கு எப்போது? எங்கே? என்ன நேரம்? எப்படிக் கொண்டாடப்படும் என்பதைப்பற்றி குறிப்பிடப்பட வேண்டும்.

| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**கட்டுரை எழுதுதல்.**

**பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிந்து 15 வசனங்கள் எழுதுக.**

i. தமிழர் கொண்டாடுகின்ற ஒரு பண்டிகை.

ii. தமிழ் வளர்த்த பெரியார் ஒருவர்.

iii. தமிழ்ப் பாடசாலையில் அண்மையில் கொண்டாடப்பட்ட கலைவிழா.